# முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் மகாஸிதுஷ் ஷரீஆவின் செல்வாக்கு

## IMPACT OF MAQASID AL-SHARIAH IN MUSLIM MARRIAGE AND DIVORCE ACT (MMDA)

Dr. A.J.M. Shihan. (Ph.D.)
*Senior Lecturer, Naleemiah Institute of Islamic Studies (NIIS)*
*zihanaj@gmail.com*

**Summary**

*In recent times, there has been significant intellectual discourse surrounding the Muslim Marriage and Divorce Act governing Sri Lankan Muslims. Criticisms of both its theoretical underpinnings and practical applications have intensified calls for reform. Despite proposals for reform from various quarters, disagreements between stakeholders have impeded progress in deciding on the matter. Nevertheless, ongoing research endeavours continue to explore this topic from diverse perspectives. Against this backdrop, the goal-oriented approach of Islamic shari'ah has garnered scholarly attention in Islamic jurisprudence over recent decades. This approach delves into understanding the essence of Islamic law, its underlying principles, and the objectives it aims to achieve. While Imam Shatibi is credited as a pioneer in this approach, Imam Ibn Ashoor is recognized for systematizing it and paving the way for further exploration. In light of these developments, there exist divergent opinions regarding proposed amendments to the Muslim Marriage and Divorce Act, covering various issues such as the appointment of female judges (qadis), minimum marriage age, marriage registration, alimony, polygamy, and divorce procedures. This article aims to analyse the impact of ijtihad, or independent legal reasoning, centred on the goals of Islamic shari'ah concerning these matters. Specifically, the article seeks to delineate the proper role of each element within shari'ah and identify the fundamental principles and rules guiding them to achieve the objectives of Islamic law. Furthermore, it proposes that resolving these issues effectively requires collaborative ijtihad involving professionals knowledgeable about the procedural intricacies and vested in protecting the interests of minority communities.*

**சுருக்கம்**

இலங்கை முஸ்லிம்களது நடைமுறையில் உள்ள முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம் தொடர்பில் அண்மைய காலங்களில் அதிகமான அறிவுசார் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. அதன் கோட்பாடு, நடைமுறை சார்ந்து எழுந்த பல்வேறு விதமான விமர்சனங்களின் காரணமாக அதில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் வலுப்பெற்றன. இதனைத் தொடர்ந்து இரு தரப்பினரால் சீர்திருத்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டு அவர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகள் காரணமாக சீர்திருத்தம் தொடர்பான முடிவு எட்டப்படவில்லை. எனினும் இது தொடர்பான ஆய்வு முயற்சிகள் பல்வேறு கோணங்களில் தொடர்கின்றன. இந்த அடிப்படையில் இஸ்லாமிய சட்டவாக்கத் துறையில் கடந்த பல தசாப்த்தங்களாக அறிஞர்களது ஆய்வுக் கவனத்தை அதிகம் பெற்றிருக்கின்ற துறையாக இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளை மையப்படுத்திய அணுகுமுறை வளர்ந்து வருகின்றது. சட்டம் எது என்று அறிந்து கொள்வது பாரம்பரிய பிக்ஹ் முறையாக இருக்க சட்டத்துக்கு பின்னால் இருக்கின்ற காரணி என்ன, அதனால் அடையப்பெற வேண்டிய இலக்கு என்ன என்பதில் கவனம் செலுத்துவதாகவே ஷரீஆவின் இலக்குகளை மையப்படுத்திய அணுகுமுறை அமைகின்றது. இந்த அணுகுமுறையின் முன்னோடியாக இமாம் ஷாதிபி திகழ்ந்த போதிலும் அதனை ஓர் முறையான கலையாக முன்வைத்தவராகவும், புதிய ஆய்வுப் பரப்புகளுக்கு வழிகளை திறந்துவிட்டவராகவும் இருபதாம் நூற்றாண்டின் இமாம் இப்னு ஆஷூர் கருதப்படுகின்றார். இஸ்லாமிய சட்டவாக்கத்துறையில் புதிய இஜ்திஹாத் முறையை ஷரீஆவின் இலக்குகளை மையமாகக் கொண்ட முறை அறிமுகப்படுத்தியது. இந்தப் பின்னணியில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கூறுகளில் பெண் காதி நியமனம், திருமண வயது, விவாகப் பதிவு, வலி, பலதார மணம், தலாக் போன்ற பல்வேறு விடயங்களில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் முயற்சியில் மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. இத்தகைய விடயங்களில் இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளை மையப்படுத்திய இஜ்திஹாத் எவ்வகையில் தாக்கம் செலுத்துகின்றது என்பதை இக்கட்டுரை ஆராய முனைகின்றது. குறிப்பாக ஷரீஆவின் இலக்குகளை அடையப்பெறும் பொருட்டு ஆரம்பமாக ஒவ்வொன்றும் ஷரீஆவில் பெறுகின்ற உரிய இடம் வரையறுக்கப்படுவதோடு, ஒவ்வொன்றிலும் தாக்கம் செலுத்தும் ஷரீஆவின் கோட்பாடுகள், விதிகள் யாவை என்பது அறியப்பட வேண்டும். மேலும் நடைமுறையை அறியக்கூடியதாக துறைசார்ந்தவர்களைக் கொண்ட கூட்டு இஜ்திஹாத் மூலமே இந்த விடயங்களுக்கான முறையான தீர்வை பெறமுடியும் அதுவே சிறுபான்மை சமூகத்தின் நலன்களை பாதுகாக்கவும் துணையாக இருக்கும் என்று இந்த ஆய்வு முன்மொழிகின்றது.

***சொற்கள்:*** விவாக மற்றும் விவாகரத்துச் சட்டம், மகாஸிதுஷ் ஷரீஆ, இஜ்திஹாத், நடைமுறை, பொதுநலன்.

**அறிமுகம்**

பொதுவாக இஸ்லாமிய சட்டவாக்க வரலாற்றில் காலம், இடம், சமூக மாற்றங்கள் என்பவற்றுக்கு ஏற்ப மாற்றங்கள் இடம்பெற்று வந்திருக்கின்றன. ஒவ்வொரு காலத்திலும் வாழ்ந்த இஸ்லாமிய சட்டத்துறை அறிஞர்கள் தாம் எதிர்கொண்ட சமூக சூழலைக் கருத்திற்கொண்டு புதிய சட்டங்களை வகுத்துள்ளார்கள். இது இஸ்லாமிய சட்டமானது சர்வதேசத்தன்மை மிக்கது என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். குறிப்பாக இஸ்லாமிய சட்டவாக்கம் எல்லாக் காலத்துக்கும் பொருத்தமானதாக அமைந்திருப்பதானது அதன் நெகிழ்வுத்தன்மையிலும், அது இலக்குகளை மையப்படுத்தியதாக அமைந்திருப்பதிலும் அதிகம் தங்கியிருக்கின்றது. இஸ்லாமிய சட்டத்தின் வெளிப்படைத் தன்மைக்கு அப்பால் அதற்கு பின்னணியில் அல்லாஹ் வைத்துள்ள இலக்குகளை அடையப் பெறுதல் என்ற விடயம் அதன் வளர்ச்சிக்கு அதிகம் பங்களிப்பு செய்திருக்கின்றது. இஸ்லாமிய சட்டங்களைப் பொருத்தவரைக்கும் அவை கால, இட, சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றமடையக்கூடியதாக இருக்கின்றன. ஆனால் ஷரீஆவின் இலக்குகள் ஷரீஆவின் மொத்தவடிவத்திலிருந்து பெறப்படுவதன் காரணமாக அவை நிலையானவையாக உள்ளன. எனவே கால, இட, சூழல் மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் குறித்த இலக்கை அடைய வேண்டும் என்ற நிலைத்த தன்மையானது மிகவும் பொருத்தமாக சட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கு துணையாகின்றது. இதுவே இலக்குகளை மையப்படுத்திய அனுகுமுறையின் சிறப்பம்சமாகும். இந்தப் பின்புலத்தில் 1951ம் ஆண்டு இலங்கையில் கொண்டுவரடப்பட முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டங்களில் அவசியமான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்றும், அதில் மாற்றங்கள் இடம்பெறாமல் இருப்பது இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளை அடையப்பெறுவதில் தடையாக இருப்பதும் விமர்சனங்களை பெற்றிருக்கின்றது. இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளை மையப்படுத்திய அணுகுமுறையானது இஸ்லாமிய ஷரீஆவின் உயிரோட்டத்தன்மையையும், அதன் அடிப்படையையும் (ரூஹ்) பாதுகாப்பதாக அமைந்திருப்பதோடு, அதுவே மிகவும் சரியாக இஸ்லாமிய சட்டவசனங்களை புரிந்து அதனால் அடையப் பெறவேண்டிய உரிய நலனை அடைந்துகொள்வதற்கான மிகவும் பொருத்தமான வழிமுறையாக உள்ளது. இஸ்லாமிய சட்ட வசனங்களை மிகச் சரியாகவும், நீதமாகவும், அதன் பன்முக தன்மைகளைக் கருத்தில் கொண்டதாக விளங்கிக் கொள்வதற்கும், அதன் பொருத்தமான நடைமுறைக்கும் மிகவும் நெருக்கமான வழிமுறை இலக்குகளை மையப்படுத்திய வழிமுறையாகும். சட்டவசனங்கள் பற்றிய மொத்தமான பார்வையும், நோக்கும் இந்த அணுகுமுறையிலே குடிகொண்டுள்ளது.[4]
இவ்வகையில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்ட சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுவதில் வேறுபட்ட நிலைப்பாடுகள் இருந்து வந்துள்ளன.

---

[4] Rysuni, Ahmad, MaqÉsid al-MaqÉsid al-GhÉyÉt al-ÑIlmiyyah wa al-ÑAmaliyyah li MaqÉsid al-ShariÑyyah, 1st ed, DÉr al-Kalemah, Cairo, 2014, pp- 13-14.

- குறித்த ஓர் மத்ஹபின் (ஷாபிஈ மத்ஹப்) வழிமுறையை கைக்கொள்ள வேண்டும் என்ற கருத்தில் உள்ளவர்கள்.[5]

- குறித்த ஓர் மத்ஹபின் (ஷாபிஈ மத்ஹப்) இன் எல்லைக்கு அப்பால் சென்று இஸ்லாமிய சட்டத்துறையில் உள்ள பல கருத்துக்களில் இருந்து பொருத்தமான கருத்தை தெரிவு செய்யும் முறையை (Elective Method) கையாள வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவர்கள்.[6]

குறித்த ஓர் மத்ஹபின் (ஷாபிஈ மத்ஹப்) வழிமுறையை பின்பற்றியதாக மாத்திரம் அமைந்திருக்கும் போது ஷரீஆவின் இலக்குகள், நலன்களில் பலதை இழக்க வேண்டியிருக்கின்றது என்பது பிரதான விமர்சனமாக உள்ளது. மற்றொரு வகையில் குறிப்பிடுவதாயின் குறித்த மத்ஹபின் எல்லையில் சட்டவாக்கத்தை சுருக்கிக் கொள்வதால் இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளை அடைவதற்கு அது தடையாக இருக்கின்றது என்ற விமர்சனம் முன்வைக்கப்படுகின்றது.

குறிப்பாக இஸ்லாமிய ஷரீஆவின் பரந்த தன்மை என்பது இலங்கை போன்ற சிறுபான்மை முஸ்லிம் சமூகத்திற்கு பல கோணங்களில் மிகவும் அவசியமானது. இஸ்லாமிய ஷரீஆ சர்வதேசத்தன்மை கொண்டது, வேறுபட்ட கலாசார, மரபுப் பின்னணி கொண்டவர்களாலும் இலகுவாகப் பின்பற்றுவதற்கு பொருத்தமானது என்பதை இலகுவாக புரிந்து கொள்ளத்தக்கவாறு அமைந்திருப்பது முஸ்லிமல்லாதவர்கள் இஸ்லாமிய ஷரீஆ பற்றிய அறிந்து கொள்ளவும், ஆய்வு செய்யவும் காரணியாக அமையலாம். அதிலும் குறிப்பாக ஷரீஆ பற்றிய பிழையான கருத்துக்கள் பரவலாக சர்வதேசமட்டத்திலான பரந்த இஸ்லாமோபோபியா வளையமைப்பினூடாக முஸ்லிமல்லாதவர்கள் மத்தியில் பரப்பப்படுவதன் காரணமாக இஸ்லாமிய ஷரீஆவின் சர்வதேசத் தன்மை அதிகம் வலியுறுத்தப்பட வேண்டிய தேவையுள்ளது.[7] எனவே ஓர் சிறுபான்மை சமூகத்தின் இலக்கு இஸ்லாத்துக்கு சான்றுபகர்தல் என்ற அடிப்படையில் அதன் பிரதான இலக்குகளுக்கு தடையாக அமையும் கருத்துவேற்றுமை கொண்ட விடயங்களில் பரந்த நோக்குடன் செயற்படுவது வலியுறுத்தப்பட வேண்டியதாகும். எனவே நடைமுறையையும், அதில் செல்வாக்கு பெறுகின்ற விடயங்களையும் கருத்தில் கொண்டு, ஷரீஆவின் சட்டங்கள், இலக்குகள், நோக்கங்கள் பற்றி ஆழமான அறிவு இலங்கை போன்ற சமூக சூழல் ஒன்றில் இஸ்லாமிய சட்டங்களது நடைமுறையை கண்டறிய அவசியமாகும். இந்த அடிப்படையில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளை மையப்படுத்திய அணுகுமுறையானது எவ்வகையில்

[5] Report of the Committee appointed to consider amendments to the Muslim Marriage and Divorce Act. Faisz Musthafa Team. 2017, pp-1-2

[6] Report of the Committee appointed to consider amendments to the Muslim Marriage and Divorce Act. Saleem Marsoof Team, 2017, pp-20-25.

[7] Shihan, Mohammad, The Role of Maqasid al-Shariah in Preserving the Interests of Muslim Minoroty Communities; A Case study of Sri Lanka, Interenational Islamic University Malaysia, 2023, p-138-140

செல்வாக்கு செலுத்துகின்றது என்பதை ஆய்வு செய்து மதிப்பிடுவதாக இந்தக் கட்டுரையின் நோக்கம் அமைந்துள்ளது.

**மகாஸிதுஷ் ஷரீஆ பற்றிய அறிமுகம்**

மகாஸிதுஷ் ஷரீஆ என்பதில் மகாஸித், ஷரீஆ என்ற இரண்டு சொற்கள் உள்ளன. மகாஸித் என்பது மக்ஸத் என்பதன் பன்மைச் சொல்லாகும். இலக்கு, நோக்கு என்ற கருத்தை அது கொடுக்கின்றது. இவ்வகையில் மகாஸிதுஷ் ஷரீஆ என்பது ஷரீஆவின் இலக்குகள், நோக்கங்கள், இரகசியங்கள், ஞானங்கள் என பல கருத்துக்களில் குறிப்பிட முடியும். இறைவன் ஷரீஆ மற்றும் ஷரீஆவின் சட்டங்களுக்கு பின்னால் வைத்துள்ள நோக்கங்கள், இலக்குகள் எனக் குறிப்பிடலாம்.[8]

இஸ்லாமிய சட்டவாக்கத்துறை வரலாற்றில் ஆரம்ப காலம் முதல் அறிஞர்களது கவனத்தைப் பெற்ற ஒன்றாக மகாஸிதுஷ் ஷரீஆ இருந்துவந்துள்ளது. இதற்கான அடித்தளம் இறைத்தூதரதும், ஸஹாபாக்களது காலத்திலும் இதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டுவிட்டது.[9] மாறாக சிலர் கருதுவது போல நவீன கால அறிஞர்களானல் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் கலையன்று இமாம்களான ஜுவைனி, அல்-கஸ்ஸாலி, அப்துஸ்ஸலாம், அல-கராபி போன்றவர்கள் இதன் முன்னோடிகளாக கருதப்படுகின்றனர். குறிப்பாக மகாஸிதுஷ் ஷரீஆவின் தந்தையாக இமாம் ஷாதிபி அவர்கள் கருதப்படுகின்றார்கள். அவரைத் தொடர்ந்து பல நூற்றாண்டுகள் கழித்து இமாம் இப்னு ஆஷுர் இக்கலைக்கு முழுமையான வடிவத்தைக் கொடுத்து, அதன் நவீன கால முன்னேற்றத்துக்கு வித்திட்டவராக கருத்தப்படுகின்றார். இவரைப் பின்பற்றி இன்று பலரும் இந்தக் கலை தொடர்பாக பரந்து ஆய்வுகளை முன்வைத்து வருகின்றனர்.[10]

மகாஸிதுஷ் ஷரீஆ பற்றி வரைவிலக்கணங்கள் இத்துறை சார்ந்த பல அறிஞர்களகால் முன்வைக்கப்பட்டுள்ளன. ஷரீஆவின் இலக்குகள் என்பது இறைவன் கொடுத்துள்ள ஒவ்வொரு சட்டங்களுக்கும் பின்னால் இருக்கின்ற நோக்கம், காரணம் எனக் குறிப்பிடலாம்.[11] இஸ்லாமிய ஷரீஆ நிறுவப்பட்டுள்ள இறையியல் இலக்குகள், பெறுமானங்களாகும்.[12] இறைவன் ஒவ்வொரு சட்டத்துக்கு பின்னாலும் ஓர் நோக்கத்தை வைத்துள்ளான். குறிப்பாக பல ஷரீஆ சட்ட வசனங்கள் அவற்றுக்கு பின்னால் உள்ள நோக்கங்களை, காரணங்களை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன. இஸ்லாமிய ஷரீஆவின்

---

[8] Jasser Auda, MaqÉsid Al Shariah a beginner's guide, International Institue of Islamic Thought, London-Washington, 2008, p-3,. See also, Adil Khan Afridi, *Maqasid Al Shariah and preservation of basic right*, Journal Education and Social Science, Vol.4 (June)274-285.

[9] Abdullah bin Bayyah, ÑAlÉqat al-MaqÉsid al-SharÊÑah bi al-Usul al-Fiqh, Al-Furqan Islamic Heritage Foundation, London, 2006, p - 39.

[10] Shihan, Mohammad, The Role of Maqasid…, pp-80-90.

[11] Fasi, al-Allal, MaqÉsid al-SharÊah al-IslÉmiyyah wa MakÉrimuhÉ, Dar al-Bydha,1973, p- 3.

[12] Auda, MaqÉsid al-Shariah, 2007, p-1.

மொத்தமான நோக்கம் மனித சமூகத்துக்கான நல்வாழ்வை வலியுறுத்துவதும், நலவை கொண்டுவருவதும் ஆகும்.[13]

மகாஸிதுஷ் ஷரீஆ என்பது ஷரீஆவின் சட்டவசனங்களை அடிப்படையாக கொண்டு பெறப்படுவதே அன்றி அவை மனிதனது பகுத்தறிவைப் பயன்படுத்தி பெறப்படுபவை அன்று. மனிதனுக்கு அல்லாஹ் அவனது வஹியை விளங்க பகுத்தறிவையும், பகுத்தறிவை நெறிப்படுத்த வஹியையும் கொடுத்துள்ளான். எனவே இரண்டும் ஒன்றோடு ஒன்று பிணைந்து, இணைந்து செல்பவையாகவே உள்ளன அன்றி முரண்பட்டுச் செல்பவை அல்ல. இஸ்லாமிய சட்ட வசனங்களை மிகவும் சரியாக விளங்குவதற்கான முறைமை அதன் நோக்கங்களை ஆய்ந்து அறிந்து அதன் அடிப்படையில் விளங்குவதாகும். எனவே இந்தக் கலைதான் அதிகம் சட்ட வசனங்களுடன் நெருக்கமானதும், சரியானதுமான தொடர்பைக் கொண்ட கலையாகும்.[14]

சுருக்கமாக சொல்வதாயின் இஸ்லாமிய ஷரீஆவின் பிரதான இலக்கு ‘‘நலனை கொண்டுவருதவாகும்’’ அடையப்பெறுவதாகும். இந்த நலன் ஒவ்வொரு சட்டங்களுக்கு பின்னாலும் பெறப்பட வேண்டும். அல்லாஹ் எந்த ஒரு சட்டத்தையும் மனிதனுக் ஓர் நலவைக் கொண்டுவதற்கும் அல்லது தீங்கை தடுப்பதற்கும் அன்றி ஆக்கவில்லை. எனவே நலன் என்பது அது கொண்டுவரப்படுவதாலோ அல்லது தீங்கு தடுக்கப்படுவதாலே உறுதியாகின்றது.

**சட்டவாக்கத்தில் மகாஸிதுஷ் ஷரீஆவின் பணி**

இஸ்லாமிய ஷரீஆவின் வரையறுக்ககப்பட்ட சட்ட வசனங்களினால் எல்லையற்ற நாளாந்தம் விரிவடைந்து செல்கின்ற மனிதனது பிரச்சினைகளுக்கான தீர்வை முன்வைக்க முடியாது. என்றாலும் இஸ்லாமிய ஷரீஆவின் மூலாதராங்களில் உள்ள கால, இட, சூழல் கடந்து சர்வதேசத்தன்மை வாய்ந்த கோட்பாடுகளும், சட்ட விதிகளும் மனிதனது எல்லையற்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆய்வு மற்றும் பகுத்தறிவுசார் தேடலுக்கான வாயில்களை திறந்து கொடுக்கின்றன. எனவே நேரடியான சட்டவசனங்கள் மூலம் தீர்வு சொல்லப்படாத புதிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஆய்வு மூலம் இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் பெற்றுக் கொள்கின்றனர். இந்த ஆய்வுக்கு அடிப்படையாக இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளை மையப்படுத்திய ஆய்வு முறை துணையாக அமைகின்றது. மேலும் வளர்ந்து வருகின்ற இந்தக் கலையை சட்டத்துறை அறிஞர்கள் சட்டங்களுக்கு பின்னால் இருக்கின்ற நோக்கங்களைக் கண்டறியவும், சட்டத்துறையை புதிய சந்தர்ப்பங்களுக்கு பிரயோகிக்கவும், முரண்பட்ட சட்டத் தீர்ப்புகளுக்கிடையில் இணக்கப்படு காணவும் பயன்படுத்துகின்றனர்.

---

[13] Ibn Ashur, Muhammad TÉhir. (2006). “*Ibn Ashur Treatise on MaqÉsid al-SharÊÑah*” International Institute of Islamic Thought, London., p-87.
[14] Rysuni, Ahmad, MaqÉsid MaqÉsid…, 2014, pp- 13-14.

இந்தக்க கலையின் முக்கியத்துவத்தை இமாம் ஷாதிபி பின்வருமாறு வரையறை செய்கிறார். ஓர் சட்ட அறிஞர் (முஜ்தஹித்) பின்வரும் இரண்டு தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும். முதலாவது இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகள் பற்றிய ஆழமான அறிவு அவருக்க இருக்க வேண்டும். இரண்டாவது அந்த இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு சட்டங்களை வகுக்கும் ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும்.[15] எமது முதன்மையான இலக்கு ஷரீஆவின் இலக்குகளை, நோக்கங்களை வரையறுப்பதாக இருக்க வேண்டும். ஏனென்றால் ஷரீஆவின் நடைமுறை ஊடாக யார் அதன் இலக்குகளை நோக்கங்களை அறிந்து கொள்ளத் தவறுகின்றாறோ அவர் ஷரீஆவை முழு மொத்தமாக அறிந்து கொள்ளத் தவறுகின்றார்.[16]

தெளிவான சட்ட வசனங்களுக்குள்ளால் வரையறுக்க முடியாக புதிய முன்னேற்றங்கள், சந்தர்ப்பங்கள் என்பவற்றுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு இலக்குகளை மையப்படுத்திய முறைமை மிகவும் அவசியமானது. மகாஸிதுஷ் ஷரீஆ என்பது இலக்குகளை மையப்படுத்திய சட்டவாக்க முறைமையாகும். எனவே சட்டவாக்கத்தில் ஈடுபடுகின்றவர் ஷரீஆவின் இலக்குகளை அறிந்திருப்பது அவசியமாகும்.

**ஷரீஆவின் இலக்குகளது வகைகள்**

ஷரீஆவின் இலக்குகளை பல அடிப்படைகளைக் கொண்டு பல்வேறு விதத்தில் வகைப்படுத்தி நோக்குகின்றனர். இவ்வாறு ஷரீஆவின் இலக்குகளை வகைப்படுத்தி நோக்க முடியுமாக இருப்பதானது ஷரீஆவின் இலகுத்தன்மையயும், அது நடைமுறைக்கு சாத்தியமானது என்பதையும் எடுத்துக்காட்டக் கூடியதாக உள்ளது.

முக்கியத்துவ வரிசை அடிப்படையில் கொண்டு அத்தியவசியமானவை (லரூரிய்யாத்), அவசியமானவை (ஹாஜிய்யாத்), மேலதிகமானவை (தஹ்ஸீனிய்யாத்) என்று பிரித்து நோக்கப்படும் அமைப்பானது மிகவும் ஆரம்ப பிரிப்பு முறையாகும்.[17]

இஸ்லாமிய சட்டம் செல்வாக்கு பெரும் எல்லையைக் கருத்திற் கொண்டு இலக்குகள் பொதுவானவை, (ஆம்மா) வரையறுக்கப்பட்டவை, (காஸ்ஸா) குறிப்பானவை (ஜுஸஈ) என பிரிக்கப்படுகின்றன. ஷரீஆவின் மொத்தமான அமைப்பிலிருந்து பெறப்படும் இலக்குகள் பொதுவனவை ஆகும். இவ்வகையான இலக்கு எல்லோருக்குமானதாகும். உதாரணமாக நீதி, சமத்துவம், சமூக அங்கத்தவர்களுக்கிடையிலான ஒற்றுமை, நெகிழ்வுத்தனமை போன்ற இலக்குகள் எல்லோருக்கும் அல்லது பெரும்பான்மையானோருக்கு

[15] ShÉtibÊ, Abu IshÉq. al-MuwÉfaqÉt fÊ UsËl al-SharÊÑah, (ed. Abd Allah al-DarrÉz). DÉr al-Kutub al-Ñilmiyyah, (n.d). Beirut. Lebanon. Book 2, Vol -4, p -76.
[16] Al-Juwaini, Abu al-MaÑÉli, Al-Burhan fi Usul al-Fiqh, 2nd edn. (ed) Abdul Azim al-Dib. Cairo: Dar al-Ansar, 1979, Vol. 10, p.295. 3
[17] Najjar, Abd al Majid, *MaqÉsid al Sharaih Bi Abad Jadidah*, Dar al garb al Islami, 2008, pp- 46-48.

பொதுவானவையாகும்.[18] வரையறுக்கப்பட்ட இலக்குகள் என்பது ஷரீஆவின் குறித்த ஓர் பகுதியின் இலக்காக அமைவதாகும். உதாரணமாக குடும்ப சட்டப்பரப்பில் பிள்ளை பராமறிப்பு என்பதைக் குறிப்பிட முடியும். குறிப்பான இலக்கு என்பது குறித்த ஒவ்வொரு சட்டங்களுக்கு பின்னாலும் உள்ள நோக்காகும். உதாரணமாக பிரயாணத்தில் உள்ள நோன்பாளிக்கு நோன்பை விட முடியும் என்ற சட்டத்தின் பின்னால் உள்ள நோக்கம் சிரமத்தை நீக்குவதாகும்.[19]

எல்லா குறிப்பான இலக்குகளும் வரையறுக்கப்பட்ட இலக்குகளின் கீழ் வரக்கூடியவையாகும், அல்லது அதன் விரிவாக்கமாகும். எல்லா குறிப்பான மற்றும் வரையறுக்கப்பட்ட இலக்குகளும் பொதுவான இலக்குகளுக்கு கீழால் வரக்கூடியவையாகும். மறுபுறத்தில் வரையறுக்கப்பட்ட இலக்குகள் குறிப்பான இலக்குகளின் தொகுதியிலிருந்து உருவாகுவதாகும். பொதுவான இலக்குகள் குறிப்பான மற்றும் வரையறுக்கப்பட்ட இலக்குகளின் அடியாக உருவாகுபவயைாகும். ஆகவே இந்து இணைந்த தொடர்பு விடயத்தில் சட்ட அறிஞர் கவனம் செலுத்த வேண்டும்.[20] இத்தகைய இலக்குகளின் வேறுபட்ட பன்முக பிரிப்பு முறையானது இஸ்லாமிய ஷரீஆவின் பரந்த தன்மையை எடுத்துக்காட்டுகின்றன. குறித்த ஒவ்வொரு விடயத்தையும் சரியாக மதிப்பிடுவதற்கு இந்த பிரிப்பு முறை துணையாகின்றது.

### ஷரீஆவின் அடிப்படை உயர் இலக்குகள்

இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படை உயர் இலக்குகள் பற்றிய கலந்துரையாடலானது ஆரம்பம் முதல் அறிஞர்களது கவனத்தைப் பெற்ற விடயமாகும். இமாம் ஜுவைனி முதல் சமகாலத்தில் ரைஸூனி வரை இந்த விடயத்தில் பங்களிப்பு செய்துள்ளனர். இஸ்லாமிய ஷரீஆவின் உயர் இலக்குகளாக நம்பிக்கை, உயிர், அறிவு, பணம் மற்றும் கட்பைப் பாதுகாத்தல் என்ற ஐந்து விடயங்கள் உள்ளன. இமாம் அல்-கராபி அவர்கள் ஆறாவது விடயமாக மனிதனது மானத்தை பாதுகத்தல் என்ற விடயத்தை சேர்த்தார்கள்.[21] இவை உயர் இலக்குகள், அடிப்படை ஐந்து துண்கள், ஐந்து அடிப்படைகள், ஷரீஆவின் மொத்தப் பெறுமானங்கள் என பல பெயர்களில் அழைக்கப்படுகின்றன. இந்த ஐந்து விடயங்களது பாதுகாப்பும் உத்தாரவாதப்படுத்தப்படுவதானது தனிமனிதனுக்கும், சமூகத்துக்கும் இன்றியமையாதவையாகும். இந்த ஐந்து விடயங்களையும் பாதுகாப்பதும், வளர்ப்பதும் ஒரு சமூகத்தின் அமைதியான தொழிற்பாட்டுக்கு அவசியமாகும்,

---

[18] Ibid, p - 44.
[19] Auda, Jasser, *Maqasid al-Shariah As Philosophy of Islamic Law. A system approach*. London: International Institute of Islamic Thought, 2007, p-5.
[20] Rysuni, Ahmad, MaqÉsid al-MaqÉsid.., 2014, p- 77.
[21] Ibn ÑÓshËr, Muhammad TÉhir. (1997). *MaqÉsid al-SharÊÑah al-IslamiyyÉh* (Higher Objectives of Islamic Law) ed. Muhammad El-TÉhir El-MesÉwi. Malaysia: Al-BasÉir., 1997, p- 210.

அது இழக்கப்படும் போது சமூக ஒழுங்கு சிதைவடையும்.[22] கிளை அம்சங்களில் சட்டங்களை வகுத்தெடுப்பதற்கு இந்த ஐந்து விடயங்களையும் அடிப்படையாக கொள்ள முடியும். இவற்றை பாதுகாக்கும் சட்டங்கள் ஏற்கத்தக்கதாகவும், இவற்றில் பாதிப்பை ஏற்படுத்துபவை தவிர்க்கப்பட வேண்டியதாகவும் கொள்ளப்படும்.[23]

### ஷரீஆவின் இலக்குகளது இரு பரிமாணங்கள்: பாதுகாத்தல் வளர்த்தல்

நலனை (மஸ்லஹா) பெற்றுக் கொள்ளல் என்பது இரண்டு வகையில் அமைகின்றது. ஒன்று பெற்றுக்கொள்ளல் (தஹ்ஸீல்) மற்றது பாதுகாத்தல் (ஹிப்ல்) ஆகும். மனித நலன்களை வளர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் விடயங்கள் பெற்றுக் கொள்ளல் என்றும் தீங்கைத் தடுத்தல், அழிவிலிருந்து பாதுகாத்தல் என்பதன் மூலம் பாதுகாத்தல் என்றும் கொள்ளப்படும்.[24] இவ்வகையில் ஷரீஆவின் இலக்குகள் ஒவ்வொன்றும் பாதுகாத்தல், வளர்த்தல் என்ற இரு பரிமாணங்கள் உள்ளன. இவை இரண்டும் கருத்தில் கொள்ளப்படும் போதே இலக்குகளின் மொத்தமான அடைவாக கொள்ளப்படும். உதாரணமாக வாழ்வு என்பது ஆரோக்கியமான உணவினால் வளர்த்து பாதுகாக்கப்படுகின்றது அதே நேரம் மனித உயிருக்கு தீங்கு ஏற்படுத்துதவற்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளதன் மூலம் அது அழிவிலிருந்து பாதுகாக்கப்படுகின்றது.[25] இந்த இரு பரிமாண முறை குறிப்பாக முஸ்லிம் சிறுபான்மை சமூக அமைப்புக்கு மிகவும் பொருத்தமானதாகும். ஆனால் இவற்றில் இரண்டாம் பரிமாணமாக உள்ள வளர்த்துப் பாதுகாத்தல் என்ற விடயம் சட்ட அறிஞர்களிடத்தில் போதுமான கவனத்தைப் பெறவில்லை என்று இப்றாஹீம் அல்-கானிம் குறிப்பிடுகின்றார்.[26]

### நடைமுறை சமூக மாற்றங்களை கவனத்தில் கொள்ளல்

ஷரீஆவின் இலக்குகளை அடையப்பெறுவதில் நடைமுறையை கருத்தில் கொள்ளல் என்பதும் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்ற அம்சமாகும். இஸ்லாமிய சட்டவாக்க வரலாற்றில் கால, இட, சூழல் மாற்றங்கள் என்பன சட்டவாக்கத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படைகள் மாறாத போதிலும் காலத்தினதும், சூழலினதும், சமூக மாற்றங்களினதும் வித்தியாசங்களுக்கு ஏற்ப புதிய சட்டங்களை தோற்றுவிக்கும் மரபு இஸ்லாமிய சட்டத்துரை அறிஞர்களிடத்தில் ஆரம்பம்

---

[22] Ibn Ashur, 2006, p-114.

[23] Rysuni, Ahmad, MaqÉsid al-MaqÉsid …, 2014, p- 89-90.

[24] Laluddin, Hayatullah and (group of Authors), An analysis of Maslaha's Development Through al-Gazali pre and Post al-Gazali Periods. International Business Management, 6 (2): pp - 187-193.

[25] Nyazee, Imran Khan, Islamic Jurisprudence, (Usul al-Fiqh) International Institute of Islamic Thought, The other Press, Kuala Lumpur, 2003, p- 207.

[26] GhÉnim, IbrÉhim al-Buyumi, Maqsad hifz al-Nafs fi fiqh al-miyÉh, (The purpose of self-preservation in the Jurisprudence of water), Al-Furqan Islamic Heritage Foundation, London, 2014, p- 37.

முதல் இருந்து வந்துள்ளது. இந்த விடயமானது இஸ்லாமிய சட்டத்துறை எல்லோருக்கும் பொருந்தக்கூடியதது என்பதை எடுத்துக்காட்டும் சான்றாகும். இஸ்லாமிய சட்டத்துறையில் இந்த தன்மையானது அது தேக்கநிலை கொண்டதல்ல, சமூக மாற்றங்களுக்கு ஏற்ப வளர்ச்சியடையக்கூடியதல்ல என்று இஸ்லாமிய ஷரீஆ பற்றி மேலோட்டமான அறிவுகொண்டவர்கள் குறிப்பிடும் விமர்சனங்களுக்கு சிறந்த பதிலாகும் என அல்லாமா இக்பால் குறிப்பிடுகின்றார்.[27]

இஸ்லாமிய ஷரீஆ சட்டங்களது நடைமுறையில் காலத்தை, சந்தர்ப்பத்தை, இடத்தை அறிதல் என்பது மிகவும் முக்கியமானதாகும். இதனால் தான் இமாம் இப்னுல் கையிம் குறிப்பிட்டார்கள் ஓர் ஆட்சியாளர் அல்லது சட்ட அறிஞர் இரண்டு விடயங்களை அறிவது கட்டாயமாகும். ஒன்று நடைமுறையை அறிதல் இரண்டாவது நடைமுறையில் எது கடமை என்பதை அறிதல் ஆகும். எனவே ஓர் சட்ட அறிஞர் நடைமுறையையும், கடமையையும் சேர்த்து நோக்க வேண்டும். இந்த இரண்டையும் சேர்த்து நோக்கும் போதே ஷரீஆவின் இலக்கை (நலனை) அடைந்து கொள்ள முடியும்.[28]

சட்டவாக்கத்துறையின் வளர்ச்சி மற்றும் சட்டங்கள் மாற்றத்துக்கு உற்படக்கூடியவை என்பதன் கருத்து இஸ்லாமிய ஷரீஆவின் சட்டவசனங்கள் மாற்றத்துக்கு உற்படும் என்பதாகாது. ஷரீஆவின் வசனங்கள் என்பன நிலையானவை எவ்வித மாற்றத்துக்கும் உற்படாதவை. ஆகவே இங்கு மாற்றம் என்பதன் மூலம் கருதப்படுவதானது சட்டவசனங்களுக்கு கொடுக்கப்படுகின்ற வியாக்கியானங்களில் ஏற்படும் மாற்றமாகும் அவை தேவையைக் கருத்தில் கொண்டும், சமூக மாற்றங்களைக் கருத்தில் கொண்டும் அவசியப்படுகின்றன[29]. இதனாலே இமாம் இப்னுல் கையிம் அவர்கள் இஸ்லாமிய சட்டங்களானது கால, இட, மரபுகள், சந்தர்ப்பங்களது மாற்றங்களுக்கு எற்ப மாற்றமடையும் எனக் குறிப்பிட்டார்கள்.[30]

எனவே இந்த மாற்றங்கள் கால, இட, சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப ஏற்படக்கூடியது எனில் அத்தகைய மாற்றங்களை பற்றி மிகவும் சரியான அறிந்து கொள்வது சட்டத்துறை அறிஞர்களது கடமையாகும். இந்த அடிப்படையில் நடைமுறையை மிகவும் நுணுக்கமாக மதிப்பிடுவதற்கான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான சமூகவியல் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்கின்ற துறைசார்ந்தவர்களது பங்களிப்பு மிகவும்

---

[27] Chad Hillier, Muhammad Iqbal on al-fiqh: towards natural law jurisprudence, in Journal of Islamic Law and Culture, vol 12, No 03, 2010, pp-258-283.

[28] Al- QaradÉwi, Yusuf, *al-MushkilÉt al-fiqhiyyah li al-AqalliyyÉt al-Muslima fi al-garb*, in Scientific review of the European Council for Fatwa and Research, No 01, Ireland, 2002, p-18-74.

[29] Rifai, Sulaiman, The legal doctrine of Maqasid al Shariah with particular reference to the works of Imam al Shatibi: Historical and practical dimensions, School of oriental and Africal studies. University of London, 2004, p-19

[30] Ibn al-Qayyim, iÑlÉm al-MuwaqqÊn, Maktabah al-KulliyÉt al-Azahariyyah, Cairo, 1968, Vol 3, p.173.

அவசியமாகும். குறிப்பான இஸ்லாமிய ஷரீஆ கோட்பாட்டு ரீதியில் எவ்வித பலவீனத்தையும் பெற்றிருக்காத போதிலும் அதனை நடைமுறைக்கு கொண்டு செல்லும் போது அதனை நடைமுறைக்கு எடுத்துச் செல்பவர்களின் பலவீனத்தின் காரணமாக அது ஷரீஆவின் இலக்குகளை அடையத் தவறுகின்றது. இதனால் நடைமுறை பற்றிய ஆழமான அறிவும், புரிதலும் சட்டத்துறை அறிஞர்களுக்கு மிகவும் அவசியமாகும். இலங்கை முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் உள்ள பல்வேறு விடயங்களும் சமூகவியல் சார்ந்த நடுநிலையான பல ஆய்வுகளை வேண்டி நிற்கின்றன. அவற்றின் மூலம் மாத்திரமே ஷரீஆவின் நலனை அடைந்து கொள்ள துணையாகிறது.

**ஷரீஆவின் இலக்குகளில் நீதியை நிலைநாட்டல்**

நீதியை நிலைநிறுத்தல் என்பது இஸ்லாமிய ஷரீஆவின் பிரதான இலக்குகளில் ஒன்றாகும். ஏராளமான அல்குர்ஆன் வசனங்களும், சுன்னாவும் நீதி எல்லா சந்தர்ப்பங்களிலும் நிலைநாட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. அல்லாஹ் இந்தப் பிரபஞ்சத்தை நீதியை அடித்தளமாக கொண்டு படைத்துள்ளான். அதே போல் ஷரீஆவையும் நீதியை அடித்தளமாக கொண்டு ஆக்கியுள்ளான். நீதிக்கு புறம்பாக இருக்கும் எதுவும் ஷரீஆவினால் அங்கீகரிக்கப்பட்டதாக இருக்காது. இமாம் இப்னுல் கையில் குறிப்பிடும் போது ‘இஸ்லாமிய ஷரீஆ என்பது தூய நீதி, அன்பு, நலன், ஞானம் என்பவற்றை அடித்தளமாக கொண்டதாகும். ஆகவே எது நீதியன்றி அநீதியாகவும், அன்பன்றி வன்முறையாகவும், நலனன்றி கெடுதியாகவும், ஞானமன்றி அறிவீனமாகவும் உள்ளதோ அது இஸ்லாமிய சட்டமாக கொள்ளப்படமாட்டாது’’ என்றார்கள்.[31]

ஆகவே ஒரு சட்டம் நீதியை உத்தரவாதப்படுத்தாத போது அது அங்கீகரிக்கப்பட்ட சட்டமாக கருதப்பட மாட்டாது. எனவே சட்டத்துறை அறிஞர்கள் ஒவ்வொரு சட்டத்தற்கு பின்னாலும் நீதி மக்களுக்கு உத்தரவாதப்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்கின்றனர். இவை நீதி இஸ்லாமிய சட்டங்களுக்கூடாக நிலைநாட்டப்படுவது முதன்மையானது என்பதை எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக இஸ்லாமிய குடும்ப வாழ்வு முறை என்பதும் நீதியை அடித்தளமாக கொண்டிருக்கின்றது. பிள்ளைகளுக்கு மத்தியில் பெற்றோர் அன்பு காட்டுவது முதல் கணவன் மனைவிக்கிடையிலான உறவு, சொத்துப்பங்கீடு என எல்லாவற்றிலும் நீதி உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும் என்பது இஸ்லாமிய ஷரீஆவின் நோக்காகும்.

நீதி என்பது எல்லா சந்தர்ப்பங்களிலும் தனி மனிதர்களுக்கிடையில், கணவன் மனைவிக்கிடையில், பிள்ளைகளுக்கு மத்தியில், சமூக உறுப்பினர்களுக்கு மத்தியில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ‘‘நீதி செலுத்துங்கள் அதுவே இறையச்சத்துக்கு மிக நெருக்கமானதாகும்.’’[32] நீதியை வலியுறுத்துகின்ற ஏராளமான அல்குர்ஆன் வசனங்களும், சுன்னாவிலிருந்தான ஆதாரங்களும் உள்ளன. அநீதி இழைப்பது பெறும் குற்றமாகும், அது

---

[31] Ibid, P-3.

[32] Al-Quran 5:8.

கடுமையான தண்டனையைக் கொண்டுவரும் என்பதை அல்குர்ஆனும், சுன்னாவும் எச்சரிக்கின்றது.

## முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் மகாஸிதுஷ் ஷரீஆவின் செல்வாக்கை மதிப்பிடல்

நவீன பிரச்சினைகள், விவகாரங்களை அணுகுவதில் ஷரீஆவின் இலக்குகளை மையப்படுத்திய முறைமை தனித்துவமனது. ஏனெனில் இந்த அணுகுமுறை சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பின்னால் உள்ள இலக்குகளை அடையப் பெறுவதிலே கவனம் செலுத்துகின்றது. ஷரீஆவின் சட்டங்கள் மாற்றங்களுக் உற்படக்கூடியவையாக இருந்த போதிலும் இலக்குகளைப் பொருத்தவரைக்கும் ஷரீஆவின் மொத்தத்திலிருந்து பெறப்படுவதன் காரணமாக அவை நிலையானதாகவும், அதே நேரம் கருத்துவேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட "கத்இய்யாத்" என்ற பன்பையும் பெற்றிருக்கின்றது. அவ்வகையில் கால, இட, சூழல் மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் குறித்த இலக்கை அடைய வேண்டும் என்ற நிலைத்த தன்மையானது பொருத்தமான சட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கு துணையாகின்றது. மேலும் குறித்த ஒர் விவகாரத்தை அதன் நலன்கள், அதனால் ஏற்படும் விளைவுகள், அதன் நோக்கம், அதன் சமூகப் பரிமாணம், கால, சூழல் மாற்றங்களைக் கருத்தில் கொள்ளல், ஷரீஆவின் இலகுத்தன்மை, முன்னுரிமைப்படுத்தல் போன்ற அடிப்படைகள் கருத்தில் கொள்ளப்படுதன் காரணமாக பரந்த கண்ணோட்டத்தை கொண்டதாக இந்த முறைமை அமைந்திருக்கின்றது.

இவ்வகையில் இஸ்லாமிய ஷரீஆவுடைய இலக்குகளில் பரம்பரையப் பாதுகாத்தல் (ஹிப்லுன் நஸ்ல்) பிரதான இலக்குகளில் ஒன்றாகும். இந்த இலக்கானது சமகாலத்தில் இஸ்லாமிய குடும்ப நிறுவனத்தைப் பாதுகாத்தல், வளர்த்தல் என்பதாக வளர்ச்சிகண்டுள்ளது. ஆகவே முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் உள்ள விடயங்கள் இஸ்லாமிய குடும்ப நிறுவனத்தைப் பாதுகாப்பதற்கும், அதனை மேலும் வளர்ப்பதற்கும் எவ்வகையில் துணையாக அமைகின்றது என்பதை நோக்குவதே ஷரீஆவின் இலக்குகளை மையப்படுத்திய அணுகுமுறையின் அடிப்படையாகும். மற்றும் இஸ்லாமிய ஷரீஆவின் பொதுவான இலக்குகளை அடையப் பெறுவதில் எத்தகைய செல்வாக்கு செலுத்துகின்றது என்பதும் கவனம் செலுத்தப்பட வேண்டியதாகும்.

இஸ்லாமிய ஷரீஆவில் விவாகம் மற்றும் விவாகரத்துத் தொடர்பாக உள்ள சட்டங்கள் மனிதனுக்கு நலவைக் கொண்டுவரக்கூடியதாகவே இறைவன் அமைத்துள்ளான். அது திருமணம், தலாக், வலி, சாட்சி, மஹர், நபாக, மதா∴, பொருத்தப்பபாடு காணல், பலதாரமணம், திருமணப்பதிவு, காழி நீதிபதி, என்ற எல்லாவிதமான சட்டங்களும், ஒழுங்குகளும் நலவை ஏற்படுத்துவற்காகவே உள்ளன. இந்த நலன்கள் இவற்றை நடைமுறைப்படுத்தும் போதும், அவற்றுக்கான நடைமுறை ஒழுங்குகளை வகுக்கும் போதும் கனவத்தில் கொள்ளப்பட வேண்டும். இவ்வகையில் திருமணத்துடன் தொடர்பான ஒவ்வொரு

சட்டங்கள் தொடர்பிலும் அல்லாஹ் குறிப்பான ஓர் இலக்கை (மக்ஸத் ஜுஸ்இ) யும் திருமணம் என்ற பகுதியில் அமைந்து துறைசார் இலக்குகளையும் (மக்ஸத் காஸ்) வைத்துள்ளான்.

இவ்வகையில் குறித்த ஒவ்வொரு விவகாரமும் ஷரீஆவில் என்ன பெறுமானத்தைப் பெறுகின்றது என்று சரியாக வரையறுக்கப்பட வேண்டும். அத்துடன் குறித்த விடயத்தை நடைமுறைக்கு கொண்டு செல்லும் போது அதில் தாக்கம் செலுத்துகின்ற ஷரீஆப் பெறுமானங்கள், அடிப்படைகள் தொடர்பாகவும் அறியப்பட வேண்டும். இந்த இரண்டு விடயங்களும் ஷரீஆவின் இலக்குகளை அடையப்பெற துணையாக அமையும். இவ்வகையில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தில் உள்ள பெண் காதி நியமனம், விவாகப் பதிவு மற்றும் பலதார மணம் என்பன ஷரீஆவின் இலக்குகளை மையப்படுத்திய அணுகுமுறையில் இங்கு பகுப்பாய்வுக்கு உற்படுத்தப்படுகின்றன.

### பெண் காதி நியமனம்

நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பது இஸ்லாமிய ஷரீஅவின் இலக்குகளில் பிரதானமானதாகும். இஸ்லாமிய ஷரீஆவின் பொது இலக்குகளில் ஒன்றாக நீதி அமைந்துள்ளது. எனவே எல்லா சட்டங்களுக்குப் பின்னாலும் நீதி தொழிற்பட வேண்டும். இவ்வகையில் இலங்கை முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தில் பெண்களுக்கு நீதி கிடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. காதிகளாக வரவேண்டும் என்ற விடயத்தில் முஸ்லிம் ஆண் என்று வரையறுக்கப்பட்டுள்ளமை பெண்கள் காதியாக வர முயடிாது என்பதை சுட்டிக்காட்டுகின்றது.[33] எனவே இது பெண்களுக்கு நீதியான, சமமான அந்தஸ்த்து வழங்கப்படவில்லை, பெண்கள் அநீதியாக நடாத்தப்படுகிறார்கள் என்பதற்கு போதுமானதாகும். எனவே பெண்களும் விவாகப் பதிவாளர்களாக, காதிகளாக நியமிக்கப்பட சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று முன்மொழியப்படுகிறது. இவ்வகையில் பெண்கள் விவாகப் பதிவாளர்களாக, காதிகளாக வர முடியாது அப்பதவிகள் ஆண்களுக்கு மட்டுமே வழங்கப்பட முடியும் என்ற விடயம் பெண்களுக்கு அநீதி இழைப்பதாகும்.[34] பெண்கள் இப்பதவிகளை வகிக்க முடியும் என்பது இஸ்லாமிய ஷரீஆ அங்கீகரித்ததாகவே உள்ளது என்பது இதனை ஆதரிக்கின்றவர்களது கருத்தாகும்.

ஆரம்பமாக இந்த விடயத்தை இஸ்லாமிய ஷரீஆவின் இலக்குகளது நோக்கில் இதற்குரிய ஷரீஆப் பெறுமானம் என்ன என்பது அறியப்பட வேண்டும். நேரடியான, தெளிவான சட்ட வசனங்கள் எதுவும் பெண்கள் காதியாக வரமுடியாது என்றோ பெண்கள் காதியாக நியமிக்கப்பட வேண்டும் என்றோ குறிப்பிடவில்லை. பொதுவாக பொறுப்புக்களை ஆண்கள், பெண்கள் வகிக்கலாம் என்பது இஸ்லாத்தின் நோக்காகும். எல்லோரும் பொறுப்புதாரர்கள் அவர்களது பொறுப்புகள் பற்றி விசாரிக்கப்படும். (ஹதீஸ்) காதி நியமனம் என்பது குடும்ப நிறுவனத்தைப் பாதுகத்தல் (ஹிப்லுந் நஸ்ல்) என்பதுடன்

[33] Muslim Marriage and Divorce Act, 1951, Act.12(1).

[34] Report of the Committee appointed to consider amendments to the Muslim Marriage and Divorce Act. Saleem Marsoof Team, 2017, p- 34.

தொடர்பானது. அதே நேரம் இதனை தேவைகள் (ஹாஜிய்யாத்) என்ற இரண்டாம் நிலை இலக்குகளில் வைத்து நோக்க முடிகிறது. மற்றும் இஸ்லாமிய சட்டத்துறையின் பொதுவான இலக்குககள் அல்லாமல் குறித்த ஒரு பகுதியுடன் சார்ந்த இலக்குகளுடன் (மக்ஸத் காஸ்) தொடர்பானது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். மேலும் குறித்த விடயம் தொடர்பில் நேரடியான சட்டவசனங்கள் இல்லாமையினால் இந்த வியடத்தை கருத்துவேறுபாடுகளுக்கு உட்பட்டது (ழன்னிய்யாத்) என்ற வட்டத்தில் வைத்து நோக்க வேண்டும். இந்த அடிப்படையில் குறித்த விடயம் கலந்துரையாடலுக்கு உற்பட வேண்டியது என்பதோடு இவ்விடயம் தொடர்பில் குறித்த ஓர் கருத்தில் மாத்திரம் பிடிவாதம் கொள்வதால் ஏற்படும் விளைவுகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக சமூகத்தின் பொதுநலன், ஒற்றுமை, இணக்கப்பாடு, அடுத்த சமூகங்களுக்கு மத்தியிலான நன்மதிப்பு என்பன இலங்கை போன்ற சுழலில் கருத்தில் கொள்ளப்படுவது அவசியமாகும். கருத்துவேறுபாட்டுக்கு உட்பட்ட இந்த விடயம் தொடர்பில் கூட்டு இஜ்திஹாத் முறைமையினூடாக, கலந்துரையாடல் என்ற முறைமையைப் பயன்படுத்தி தீர்வு பெறப்பட வேண்டும். குறித்தி விடயம் 'ரீஆவில் பெறுகின்ற தரத்தை (மேலே விபரிக்கப்பட்ட) கருத்தில் கொண்டு அதற்குரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக ஷரீஆவின் இலக்குகளது நோக்கில் இங்கு கவனத்தைப் பெறவேண்டிய விடயம் "காதி நியமனம்" என்பது மக்களுக்கு மத்தியில் நீதியை நிலைநாட்டும் இலக்கை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த அடிப்படையில் பெண்கள் குறித்த பதவிகளுக்கு நியமிக்கப்படுவது நீதியை நிலைநாட்டப்படும் என்பதை உத்தரவாதப்படுத்துமா என்பது கவனிக்கத்தக்கதாகும். நீதி என்பது ஆண்கள் பெண்கள் என எல்லோருக்கும் பொதுவானதாகும். நீதி என்ற இலக்கு மாற்றமடையாதாகும். நீதியை நிலைநாட்டும் பொறிமுறை மாற்றமடைந்தாலும் நீதி என்பது மாற்றமடையமாட்டாது. இதுவே ஷரீஆவின் இலக்குகளை அடிப்படையாக கொண்டு ஆராய்வதன் தனித்துவமாகும். சட்டங்கள் மாற்றமடையலாம் ஆனால் இலக்கு மாற்றமடையமாட்டாது. இந்த அடிப்படையில் நோக்கும் போது இலங்கை போன்ற சமூக சூழலில் பெண்களை காதிகளாக நியமிக்கப்படுவது பெண்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கான சிறந்த முறையாகுமா என்பது சமூக ஆய்வுக்கூடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆகவே யார் நீதிபதியாக நியமிக்கப்பட வேண்டும் என்ற வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பால் இங்கு நீதியை உத்தரவாதப்படுத்தக்கூடிய முறைமையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். தவிர ஆண், பெண் என்ற பால் வேறுபாடு நீதியை நிலைநிறுத்த உதவும் என்பது தவறான எடுகோளாக அமையலாம். இறுதியாக நீதியை நிலைநிறுத்தல் என்பதில் பொருத்தமானவர், தகுதியானவர் காதியாக நியமிக்கப்பட வேண்டும் என்பதே அன்றி ஆண்கள் மாத்திரம் என்று வரையறுப்பது பொருத்தமற்றது. எனவே நியமிக்கப்படுகின்ற நீதிபதிகளுக்கு முறையாக மார்க்க அறிவும், தக்வாவும் பயிற்சியாக கொடுக்கப்படுவதற்கான பயிற்சிகளும், தீர்ப்பு வழங்குவது தொடர்பான ஆழமான அறிவும், பயிற்சியும் கொடுக்கப்பட ஏற்பாடுகள் அவசியமாகும். நபியவர்கள் கூட பொறுப்புக்களை ஒப்படைக்கும் பொருத்தமானவர் என்பதையே கருத்தில் கொண்டிருந்தார் என்பதை பல ஹதீஸ்கள் உறுதிப்படுத்துகின்றன. பொருத்தமற்றவர்கள் பதவிக்கு

அமர்த்தப்படுவதை கண்டித்த நபியவர்கள் அது மறுமையின் அடையாளங்களில் ஒன்று எனக் குறிப்பிட்டார்கள்.

### திருமணப் பதிவு

திருமணம் நடைபெறும் சமயம் இரண்டு விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒன்று இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படையில் ''நிகாஹ்'' வைபவத்தில் மணமகன், வலி, சாட்சி, திருமணத்தை நடாத்தும் மார்க்க அறிஞர் என்போரது பங்கேற்றலுடன் ஈஜாப், கபூல் நடைபெறுதல். இதுவே ஆரம்ப நடைமுறையாக இருந்து வந்ததாகும். இரண்டாவது திருமணப் பதிவாளர் குறித்த திருமணத்தில் கலந்துகொண்டு பதிவு செய்வதல். இந்த நடைமுறை நலனையும், விளைவுகளையும், தேவைகளையும் கருத்தில் கொண்டு பின்னர் தோற்றுவிக்கப்பட்டதாகும். இந்த விடயத்தில் ஒரு திருமணம் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முதல் அம்சம் மாத்திரம் போதுமனாது இரண்டாவது விவாகப் பதிவு கட்டாயமற்றது என்பது ஒரு தரப்பினர் கருத்தாகும். என்றாலும் விவாகப் பதிவு உடனடியாக இடம்பெறாமல் நடைபெறும் திருமணத்தை அங்கீகரிக்க முடியாது, செல்லுபடியற்றதாக கருதப்பட வேண்டும் என்ற கருத்தை மற்றொரு தரப்பினார் கொண்டுள்ளனர்.[35] எனவே இந்த விடயம் தொடர்பில் தீர்வு பெறப்பட வேண்டும்.

அதாவது விவாகப் பதிவு தொடர்பில் முதல் தரப்பினர் இஸ்லாமிய ஷரீஆ அமைப்பில் ஆரம்பத்தில் இருந்த முறை மாத்திரம் திருமணம் அங்கீகரிக்கப்பட போதுமானது என்ற கருத்தை வலியுறுத்துகின்றனர். விவாகப் பதிவு என்பது திருமணம் செல்லுபடியற்றதாக மாற்றும் என்பதில் தாக்கம் செலுத்துவதில்லை. இதனால் விவாகப் பதிவு மேற்கொள்ளப்படாத போதும் விவாகம் செல்லுபடியற்றதாக மாறாது என்று கொள்ள வேண்டும். ஆனால் பதிவு செய்யாது திருமணம் நடாத்தப்படுவது தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படும். எனவே விவாகப் பதிவை சில காலங்கள் (இரண்டு மாதங்கள்) தாமதப்படுத்தலாம் என்கின்றனர்.[36]

அடுத்த தரப்பினர் விவாகப் பதிவு கட்டாயமானதாகும். விவாகப் பதிவை உரிய நேரத்தில் நிகாஹ் நடைபெறும் சபையில் மேற்கொள்ளாத போது பல்வேறுவிதமான விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உதாரணமாக பதிவாளருக்கு போலியான தகவல்களை வழங்குதல். எனவே இந்த பாதிப்புகளைத் தடுக்கும் நோக்கில் விவாகப்பதிவு தமாதிக்ககாது கட்டாயமாக்கப்பட வேண்டும்.[37] குறிப்பாக இந்த விளைவுகளைக் கருத்தில்

[35] Report of the Committee appointed to consider amendments to the Muslim Marriage and Divorce Act. Saleem Marsoof Team, 2017, p- 37.
[36] Report of the Committee appointed to consider amendments to the Muslim Marriage and Divorce Act. Fayse Mustafa Team, 2017, p- 6.
[37] Report of the Committee appointed to consider amendments to the Muslim Marriage and Divorce Act. Saleem Marsoof Team, 2017, pp-35-37.

கொண்டு பதிவு செய்யப்படாத விவாகம் செல்லுபடியற்றதாக கருதப்பட வேண்டும் என்பது அவர்களது பலமான நிலைப்பாடாகும்.

இங்கு விவாகப் பதிவு திருமணம் ஒன்றை செல்லுபடியற்றதாக மாற்றும் காரணியாக அமைகிறதா என்பதே கருத்துவேறுபாட்டின் அடிப்படையாக உள்ளது. இரு தரப்பும் விவாகம் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றனர். இங்கு விவாகப் பதிவு என்ற பொதுச் சட்டம் மனித நலன்களைக் கருத்தில் கொண்டு, ஏற்படக்கூடிய எதிர்மறையான விளைவுகளை தடுப்பதைக் கருத்தில் கொண்டு அது கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று வாதிடப்படுவது இஸ்லாமிய ஷரீஆவின் நோக்கில் பலமானதாக கொள்ள முடியும்.

எனவே உடனடியாக பதிவு மேற்கொள்ளப்படுவதே நலனை கொண்டுவரக்கூடியதும், தீங்கை தடுக்கக்ககூடியதும் ஆகும். எனவே ஏற்படக்கூடிய விளைவுகளைக் கருத்திற் கொண்டும் பதிவு செய்யாமல் இருப்பது தவிர்க்கப்பட வேண்டும். மேலும் பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதல் பெறுதல், பாடசாலைக்கு சேர்த்தல், வாரிசுரிமையைப் பெறுதல் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு பதிவு செய்யாமல் விடுவது காரணமாகிறது. எனவே ஷரீஆவின் பொதுவான இலக்கு நலவைக் கொண்டுவருதல் என்ற அடிப்படையில் இந்த வியடம் கூடுதல் முக்கியத்துவம் பெற வேண்டியதாகும்.

இப்பின்னணியில் விவாகப் பதிவு என்பது குடும்ப நிறுவனத்தை பாதுகத்தல் என்ற பிரதான இலக்குடன் தொடர்புற்றது என்ற அடிப்படையில் நோக்கப்பட வேண்டும். குடும்ப நிறுவனத்தில அடிப்படைக்கு பாதிப்பாக அமைகின்ற அனைத்தும் தடுக்கப்பட வேண்டியதும், அதன் ஸ்திரத்தன்மையை பாதுகாக்கும் அனைத்தும் நிலைநாட்டப்பட வேண்டியவையும் ஆகும். இந்த அடிப்படையில் பரம்பரையைப் பாதுகாத்தல் என்பதில் இவர் இன்னாரின் மகன் என்று தெரிந்து கொள்வது அவசியமானதாகும், ஹாஜிய்யாத் தரத்தை பெறுவதாகும். இல்லாவிடின் அது பாரிய குழப்பத்தையும், எதிர்மறை விளைவுகளையும் சமூகத்தில் ஏற்படுத்தும்.[38] ஆகவே விவாகப் பதிவு என்பது பல கண்ணோட்டங்களில் முக்கியத்துவம் பெறுகின்றது. அதனை சாதாரணமானதாக கொள்ள முடியாது. அதனைப் பிற்படுத்துவதும் பல்வேறுவிதமான விளைவுகளை ஏற்படுத்தும். இன்றைய காலத்தில் திருமணம் முடித்து ஒரு சில நாட்களிலும் முரண்பாடுகள் ஏற்பட்டு தலாக்கை நோக்கி செல்லும் நிலை உள்ளது. எனவே பதிவு செய்யாமல் விடுவது குறித்த நபர் திருமணம் செய்யவில்லை என்பதைக் காட்டுவதோடு. இரண்டாம் திருமணத்திற்கு செல்லும் போது திருமணமாகாதவர் என்று பதிவில் பொய் தகவல் சொல்வதற்கும் வாய்ப்பாகிறது. மேலும் திருமணம் முடித்து ஒரிரு வாரங்களில் வெளிநாடு செல்பவர்களது எண்ணிக்கை இன்று அதிகமாகும். எனவே ஏமாற்றும் நோக்கத்தில் திருமணம் செய்து பின்னர் வெளிநாட்டில் மற்றொரு திருமணம் செய்து வாழவும் இது வழியாகாலாம். எனவே பதிவு

---

[38] Ibn Ashur, Muhammad TÉhir. “*Ibn Ashur Treatise…*, 2006, p-118.

செய்வதானது இத்தகைய விளைவுகளிலிருந்து தவிர்ந்து கொள்ள வழியாகின்றது. மேலும் பதிவு செய்யாமல் விடுவதை குற்றமாக கருதி தண்டிப்பது மாத்திரம் போதுமான பாதுகாப்பை குடும்ப நிறுவனத்துக்கு வழங்காது. இது ஒரு சமூகத்தில் குடும்ப நிறுவனம் பாதிக்கப்படுவதற்கு காரணமாக அமையலாம். மேலும் பலர் அநீதியாக நடந்து கொள்ள தூண்டலாகவும் அமையலாம். எனவே விளைவுகளைக் கருத்தில் கொண்டும், நலன்களை முன்னிருத்தியும் விவாகப்பதிவு வலியுறுத்தப்பட வேண்டும் என்பதை ஷரீஆ வேண்டுகிறது.

**பலதார மணம்**

பலதார மணம் என்பது இஸ்லாம் மாத்திரம் அனுமதித்த ஓர் விடயமல்ல. இறுதித்தூதருக்கு முன்னர் வந்த பல நபிமார்கள் பலதார மணம் கொண்டிருந்ததோடு, ஏனைய சமயத்தவர்கள், ஆட்சியாளர்கள் என பலரிடத்திலும் பலதார மணம் இருந்துவந்தமைக்கு வரலாறு சான்றாகும். அதே சமயம் பலதார மணத்தை அல்குர்ஆன் அங்கீரித்திருந்த போதிலும் அதற்காக வரையறைகளையும் நிபந்தனைகளயைும் விதித்திருக்கின்றது. முன்னைய சமூக அமைப்பில் இருந்த வரையறையற்ற திருமண முறைக்கு கட்டுப்பாடு விதித்து நீதி என்பதை நிபந்தனையாக முன்வைத்து பலதார மணத்தை அல்குர்ஆன் அனுமதித்தது என்று சொல்வதே பொருத்தமாகும்.[39] பலதார மணத்தை அங்கீகரிப்பதற்கு அல்குர்ஆன் குறிப்பிடும் நிபந்தனைகள் பூரணப்படுத்தப்படுகின்றதா என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அத்தகைய நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத போது அதற்கு அனுமதி மறுக்கப்படும்.[40]

இஸ்லாம் இறுதித் தூது என்ற அடிப்படையில் எந்த ஒரு சட்டத்தையும் எல்லாக் காலத்துக்கும் பொருத்தமானதாகவே அமைத்துள்ளது. ஆனால் சில சந்தர்ப்ப சூழ்நிலைகள் அல்லது நடைமுறைப்படுத்தலில் உள்ள சிக்கல்கள் குறித்த சட்டம் பொதுப்படையாக அனுமதிக்கப்படாமல் இருப்பதற்கு காரணமாகலாம். இது இஸ்லாமிய ஷரீஆவின் நெகிழ்வுத்தன்மைக்கும், இது இலக்குகளை அடிப்படையாக கொண்டிப்பதற்கும் சான்றாகும். இதற்கு சிறந்த உதாரணம் பலதார மணம் ஆகும். பலதார மணத்தை இஸ்லாம் நிபந்தனைகளுடன் பிணைத்துள்ளது. அந்த நிபந்தனைகள் நிறைவு செய்யப்படாத சமூக சூழலுக்கு அது பொருத்தமற்றதாக அப்போது சட்ட அறிஞர்களால் கொள்ளப்படும்.

அல்லாஹ் ஒரு சட்டத்தை ஆக்கியிருப்பின் அதற்கு பின்னால் அவனது நீதியும், அறிவு ஞானமும் இருக்கும். அதில் மனித சமூகத்துக்கு நிச்சயமாக நலவுகள் இருக்கும். இவ்வகையில் பலதார மணம் பல்வேறு கோணங்களில் ஒரு சமூகுத்துக்கு பயனுள்ளதாக அமையும். சில சமயங்களில் ஒரு சமூகத்தில் பண்பாட்டு, கலாசார தேவையை நிறைவு செய்யவோ, சமூகத்தின் ஒழுக்கநிலையை பாதுகாக்கவோ, தனிநபர்களின் உடலியல் தேவையை

---

39 Al-Quran 4:3.

40 Naseef, Abdullah. Muhammad Encyclopaedia of Seera, (1982), Vol -II, pp-119-126.

நிறைவுசெய்யவோ துணையாகலாம். இஸ்லாம் பொறுப்புணர்வுடன் கூடிய பலதார மணத்தையே அங்கீகரிக்கின்றது. குறிப்பாக பூரணமான நீதி நிலைநாட்டப்படும் போது மாத்திரமே இஸ்லாம் பலதார மணத்தை அனுமதிக்கிறது.[41]

இந்த அடிப்படையில் இஸ்லாமிய ஷரீஆ பலதார மணத்திற்கு கொடுத்திருக்கும் பெறுமானத்தை நோக்கும் போது அதனை அனுமதிக்கின்ற நேரடியான தெளிவான சட்டவசனங்கள் அல்குர்ஆனில் இருப்பதையும், சுன்னாவில் அதற்கான போதுமான நடைமுறை ஆதாரங்கள் இருப்பதையும் நோக்கலாம். அதே நேரம் இவ்விடயம் இஸ்லாமிய குடும்ப நிறுவனத்தைப் பாதுகாப்பதுடன் தொடர்புடையதாக உள்ளதை நோக்கலாம். இஸ்லாமிய ஷரீஆவின் பகுதிசார் இலக்குகளுடன் (மகாஸித் காஸ்ஸா) தொடர்புபட்டதாக இவ்விடயம் அமைந்திருப்பதோடு ஒரு சமூக ஒழுங்கமைப்பில் இரண்டாம் நிலைத் தேவை (ஹாஜிய்யாத்) என்ற வட்டத்தில் இதனை வைத்து நோக்க முடிகிறது. ஒரு தனிமனிதனைப் பொருத்தவரைக்கும் அவனது தேவை (ஹாஜிய்யாத்) என்ற நிலையிலே இதனை வைத்து நோக்க முடிகிறது. இந்த அடிப்படையில் இஸ்லாமிய ஷரீஆ பெறுமானம் கொடுத்த ஒரு விவகாரமாக பலதார மணத்தை நோக்க வேண்டும். என்றாலும் நீதி என்ற நிபந்தனையுடன் இணைத்து நோக்கப்பட்டிருப்பதன் அடிப்படையில் இதனால் ஏற்படுகின்ற நலவுகளும், விளைவுகளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதையே ஷரீஆவின் இலக்குகளை அடிப்படையாக கொண்ட அணுகுமுறை வலியுறுத்துகின்றது. குறித்த ஓர் சமூகத்தில் பலதார மணம் பல்வேறு எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை ஆதாரமாகக் கொண்டு இஸ்லாமிய ஷரீஆ அனுமதித்துள்ள அடிப்படை சட்டத்தை நிராகரிக்க முடியாது. மாறாக இவ்விடயம் குறித்த சமூகத்தின் நடைமுறையுடன் தொடர்பான விடயமே அன்றி இஸ்லாமிய ஷரீஆவை விமர்சிப்பதற்கான ஒன்றாக கொள்ள முடியாது. எனவே நீதி நிலைநாட்டப்படாத சமூகத்தில் சட்ட அறிஞர்கள் பலதார மணத்தை தடுப்பதற்கு அனுமதி பெறுவர்.

இஸ்லாமிய ஷரீஆவின் இந்த அடிப்படையை ஆழமாக விளங்கியிருந்த எகிப்திய அறிஞர் முஹம்மத் அப்துஹு ஒரு சயமத்தில் எகிப்திய காதி நீதிபதிகளுக்கு பலதார மணத்தை ஆண்களுக்கு தடுக்க அனுமதித்து ஓர் பத்வாவை வெளியிட்டார்கள். தெளிவான சட்டவசனம் பலதார மணத்தை அனுமதித்திருக்க அவர் அந்த பத்வாவை வெளியிடுவதற்கான காரணம் அப்போது எகிப்தில் பலதார மணம் செய்திருந்த அநேகமான குடும்பங்களில் நீதி நிலைநிறுத்தப்படாமை அவதானிக்கப்பட்டமையாகும்.[42] எனவே அன்றைய காலமும், சந்தர்ப்பமும் நீதியை நிலைநாட்டும் பொருட்டு பலதார மணத்தை தற்காலிகமாக தடைசெய்வதை வேண்டி நின்றது. இத்தகைய தீர்மாணத்தை முஹம்மத் அப்துஹு கலீபா உமர் பின் கத்தாபைப் பின்பற்றி பெற்றுக்கொண்டிருக்க முடியும். ஏனெனில் கலீபா உமர் ஒரு சமயம் முஸ்லிம்

---

[41] Ibid.

[42] Yasir S. Ibrahim, An Examination on the modern discourse on *MaqÉsid al-SharÊÑah*, *Journal of Middle east and Africa*, Vol. 5, 2014, 39-60.

ஆண்கள் அஹ்லுல் கிதாப் பெண்களை திருமணம் செய்வதை தடுத்தார்கள். ஏனென்றால் அதன் மூலம் அதிமகமாக முஸ்லிம் பெண்கள், விதவைகள் தங்களுக்குரிய துணையை பெற்றுக்கொள்ள தவறிவிடுவர். இந்த சந்தர்ப்பத்தில் சமூகத்தில் முஸ்லிம் பெண்களுக்கு ஏற்படும் தீங்கையும், அநீதியையும் தடுக்கும் பொருட்டு அவர்கள் அந்த வழிகாட்டலைக் கொடுத்தார்கள்.[43] எனவே நீதி என்ற அடிப்படைய இலக்கை கருத்தில் கொள்ளும் போது சமூகத்தின் நலன்களைப் பாதுகாக்க அது துணையாக அமைவதை நோக்க முடியும். இந்த அடிப்படையில் பலதார மணத்தை காதி நீதிபதியிடமிருந்து அனுமதி பெற்றுக் கொண்டு நிறைவேற்ற வேண்டும் என்ற நடைமுறை ஒழுங்கானது இஸ்லாமிய குடும்ப நிறுவனத்தை ஒரு சமூக அமைப்பில் பாதுகாகப்பதற்கு துணையாக இருக்கும்.

**முடிவுரை**

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டங்களில் சீர்திருத்தத்தை வேண்டியிருக்கின்ற விடயங்கள் குறிப்பாக அவற்றில் கருத்துவேறுபாடு கொண்டுள்ள விவகாரங்கள் கால, சூழல் மாற்றங்களை வேண்டி நிற்றல், பொது நலன், விளைவுகள், சமூகத்தின் பொது இலக்கு, முன்னுரிமப்படுத்தல், ஷரீஆவின் இலகுத்தன்மை போன்ற பல்வேறு அடிப்படைகளுடன் தொடர்புற்றவையாக இருப்பதை நோக்கலாம். இந்ந அடிப்படையில் இவற்றை அணுகுவதில் ஷரீஆவின் இலக்குகளை மையப்படுத்திய அணுகுமுறை செல்வாக்கு பெறுகின்றது. குறிப்பாக சமகால பிரச்சினைகளை அணுகுவதில் ஷரீஆவின் இலக்குகளை மையப்படுத்திய முறைமை தனித்துவமனது. ஏனெனில் அது இஸ்லாமிய சட்டங்களுக்கு பின்னணியில் அல்லாஹ் வைத்துள்ள இலக்குகளை அடையப் பெறுதல் என்பதையே இலக்காக கொண்டிருப்பதை காணலாம். ஷரீஆவின் இலக்குகளைப் பொருத்தவரைக்கும் ஷரீஆவின் மொத்தத்திலிருந்து பெறப்படுவதன் காரணமாக அவை நிலையானதாகவும், அதே நேரம் கருத்துவேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட "கத்இய்யாத்" என்ற பன்பைப் பெற்றதாகவும் உள்ளது. அவ்வகையில் கால, இட, சூழல் மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் குறித்த இலக்கை அடைய வேண்டும் என்ற நிலைத்த தன்மையானது பொருத்தமான சட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கு துணையாகின்றது. மேலும் குறித்த ஓர் விவகாரத்தை அதன் நலன்கள், அதனால் ஏற்படும் விளைவுகள், அதன் நோக்கம், அதன் சமூகப் பரிமாணம், கால, சூழல் மாற்றங்களைக் கருத்தில் கொள்ளல், ஷரீஆவின் இலகுத்தன்மை, முன்னுரிமைப்படுத்தல் போன்ற அடிப்படைகள் கருத்தில் கொள்ளப்படுதன் காரணமாக பரந்த கண்ணோட்டத்தை கொண்டதாக இந்த முறைமை அமைந்திருக்கின்றது. மற்றும் ஷரீஆவின் இலக்குகளது பல்வகைமை குறித்த ஒவ்வொரு விடயத்துக்கும் கொடுக்க வேண்டிய ஷரீஆப் பெறுமானத்தை வழங்குவதற்கு துணையாகின்றது. இவ்வகையில் இலங்கை போன்ற சிறுபான்மை சமூக சூழமைப்பில் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச்

[43] Abu Ja'far Mohammad bin Jarir al-Tabari, TarÊh al-Tabri, (history of envoys and kings), Ed: Mohammad Abu Fadhl Ibrahim, Silsilat Zahair al-Arab, Dar al-MaÉrif, Egypt,1963, Vol 3, p- 588.

சட்டங்கள் தொடர்பிலான பொருத்தமான இஜ்திஹாதை மேற்கொள்வதற்கு துணையாக ஷரீஆவின் இலக்குகளை மையப்படுத்திய ஆய்வு முறைமை அமைகின்றது. இவ்வகையில் இந்த ஆய்வு பின்வரும் பரிந்துரைகள், ஆலோசனைகளை முன்வைக்கின்றது.

1. நடைமுறையை விளங்கிக் கொள்வதற்கான சமூகம் பற்றிய அதிகமன கள ஆய்வுகள் (எண்சார், பண்புசார்) அவசியப்படுகின்றன.
2. ஷரீஆவின் இலக்குகளை மையப்படுத்திய நடுநிலையான ஆய்வு முயற்சிகள மற்றும கலந்துரையாடல்கள் பல மட்டங்களிலும் அவசியமாகும்.
3. தனிநபர் கருத்துக்கள் தவிர்த்து கூட்டு இஜ்திஹாத் முறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
4. இந்த வியடம் சமூகத்தினதும், நாட்டினதும் ஏனைய சமூக, பொருளதார, பண்பாட்டு, காலாசார விவகாரங்களில் எந்தளவு தூரம் தாக்கம் செலுத்துகின்றது என்பது ஆய்வு செய்யப்பட வேண்டும்.
5. கருத்து வேறுபாட்டுக்ரிய வரையறைகள் ஒழுங்குகள் பேணப்படுவதுடன், முஸ்லிம் சமூகத்தின் பொது நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.
6. குடும்ப நிறுவனத்தை வளர்ப்பதற்காக பல்வேறு செயற்திட்டங்கள் சமூகத்தில் அதிகரிக்கப்பட வேண்டும்

## References


Abdullah bin Bayyah. (2006). ÑAlÉqat al-MaqÉsid al-SharÊÑah bi al-Usul al-Fiqh, Al-Furqan Islamic Heritage Foundation. London.

Abu Ja’far Mohammad bin Jarir al-Tabari. (1963). TarÊh al-Tabri, (history of envoys and kings). Ed: Mohammad Abu Fadhl Ibrahim. Silsilat Zahair al-Arab. Dar al-MaÉrif, Egypt.

Auda, Jasser. (2007). *Maqasid al-Shariah As Philosophy of Islamic Law. A system approach*. London: International Institute of Islamic Thought.

Auda, Jasser. (2008). *Maqasid al-Shariah A beginner’s guide.* London: International Institute of Islamic Thought.

Adil Khan Afridi, *Maqasid Al Shariah and preservation of basic right*, Journal Education and Social Science, Vol.4 (June)274-285.

Chad Hillier. (2010). Muhammad Iqbal on al-fiqh: towards natural law jurisprudence. In Journal of Islamic Law and Culture.

Fasi, al-Allal. (1973). MaqÉsid al-SharÊah al-IslÉmiyyah wa MakÉrimuhÉ. Dar al-Bydha.

GhÉnim, IbrÉhim al-Buyumi. (2014). Maqsad hifz al-Nafs fi fiqh al-miyÉh. (The purpose of self-preservation in the Jurisprudence of water). Al-Furqan Islamic Heritage Foundation. London.

Jasser Auda. (2008). MaqÉsid Al Shariah a beginner's guide. International Institue of Islamic Thought. London-Washington.

Ibn Ashur, Muhammad TÉhir. (2006). "*Ibn Ashur Treatise on MaqÉsid al-SharÊÑah*" (translated from Arabic by Muhammad al-Tahir el-Mesawi) International Institute of Islamic Thought, London.

Ibn ÑÓshËr, Muhammad TÉhir. (1997). *MaqÉsid al-SharÊÑah al-IslamiyyÉh* (Higher Objectives of Islamic Law) ed. Muhammad El-TÉhir El-MesÉwi. Malaysia: Al-BasÉir.

Ibn al-Qayyim. (1968). iÑlÉm al-MuwaqqÊn. Maktabah al-KulliyÉt al-Azahariyyah. Cairo.

Juwaini, Abu al-MaÑÉli. (1979). Al-Burhan fÊ UsËl al-Fiqh. (2nd ed. (ed) Abdul Azim al-Dib. Cairo: Dar al-Ansar.

Laluddin, Hayatullah and (group of Authors), An analysis of Maslaha's Development Through al-Gazali pre and Post al-Gazali Periods. International Business Management, 6 (2): pp - 187-193.

Najjar, Abd al Majid. (2008). *MaqÉsid al Sharaih Bi Abad Jadidah*. Dar al garb al Islami.Naseef, Abdullah. (1982). Muhammad Encyclopedia of Seera. The Muslim School Trust. London.

Nyazee, Imran Khan (2003). Islamic Jurisprudence. (Usul al-Fiqh) International Institute of Islamic Thought. The other Press. Kuala Lumpur.

Muslim Marriage and Divorce Act of 1951.

QaradÉwi, Yusuf. (2002). *al-MushkilÉt al-fiqhiyyah li al-AqalliyyÉt al-Muslima fi al-garb*, in Scientific review of the European Council for Fatwa and Research. No 01. Ireland.

Report of the Committee appointed to consider amendments to the Muslim Marriage and Divorce Act. P.C. Faisz Mustafa Team. 2017.

Report of the Committee appointed to consider amendments to the Muslim Marriage and Divorce Act. P.C. Saleem Marsoof Team. 2017.

Rysuni, Ahmad, MaqÉsid al-MaqÉsid al-GhÉyÉt al-ÑIlmiyyah wa al-ÑAmaliyyah li MaqÉsid al-ShariÑyyah, 1st ed, DÉr al-Kalemah, Cairo.

Rysuni, Ahmad, MaqÉsid al-MaqÉsid al-GhÉyÉt al-ÑIlmiyyah wa al-ÑAmaliyyah li MaqÉsid al-ShariÑyyah, 1st ed, DÉr al-Kalemah, Cairo, 2014, p- 89-90.

Rifai, Sulaiman. (2004). The legal doctrine of Maqasid al Shariah with particularreference to the works of Imam al Shatibi: Historical and practical dimensions. (Ph.D. thesis – School of Oriental and African Studies. University of London.

ShÉtibÊ, Abu IshÉq. al-MuwÉfaqÉt fÊ UsËl al-SharÊÑah, (ed. Abd Allah al-DarrÉz). DÉr al-Kutub al-Ñilmiyyah, (n.d). Beirut. Lebanon.

Shihan, Mohammad. (2023) The Role of MaqÉsid al--SharÊÑah in Preserving the Interests of Muslim Minority Communities; A Case Study of Sri Lanka. International Islamic University Malaysia.

Sivakumar Sivkajan. Muslim Marriage and Divorce Act (1957) of Sri Lanka; Critically analyzed the inequalities in the Muslim children, Women, Quazi Court system and overlapping with general law in Sri Lanka. (n.d)

Yasir S. Ibrahim, An Examination on the Modern Discourse on *MaqÉsid al-SharÊÑah*, *Journal of Middle East and Africa*, Vol. 5, 2014, 39-60.

Ibrahim, A. F. (2018). *Child Custody in Islamic Law: Theory and Practice in Egypt Since the Sixteenth Century*. Cambridge, United Kingdom: Cambridge University Press.